

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஓணம் பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி மற்றும் சிறப்பு விற்பனையை, அசிசி வளாகத்தில் அமைந்துள்ள சமூகநல கூடத்தில் இன்று (29.08.2016) குத்துவிளக்கேற்றி வைத்து, முதல் விற்பனையை இன்று (29.08.2016) தொடங்கி வைத்தார்.

செ.வெ.எண்: 578/2016 நாள்: 29.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஓணம் பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸ் சார்பாக அமைக்கப்பட்டிருந்த கைத்தறி கண்காட்சியினை, குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, முதல் விற்பனையை இன்று (29.08.2016) தொடங்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஓணம் பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி மற்றும் சிறப்பு விற்பனையை, அசிசி வளாகத்தில் அமைந்துள்ள சமூகநல கூடத்தில் இன்று (29.08.2016) குத்துவிளக்கேற்றி வைத்து, முதல் விற்பனையை ஆயூர்வேத மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. ஜெ. கிளாரன்ஸ் டேவி அவர்களுக்கு இன்று (29.08.2016) வழங்கி, தெரிவித்ததாவது:-

கோ-ஆப்டெக்ஸ், என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935-ம் ஆண்டில் துவக்கப்பட்டு, தொடர்ந்து 81 ஆண்டுகளாக, தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வருகிறது. இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும், வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கிய காரணங்களாகும்.

திருநெல்வேலி மண்டலத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை குறியீடு அடைவதற்கு பல்வேறு ஆக்கபூர்வமான உத்திகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 4 விற்பனை நிலையங்களிலும் ஓணம் பண்டிகையினை முன்னிட்டு, மங்கையர் விரும்பும் மென்பட்டுச் சேலைகள், சுபமுகூர்த்த திருமண பட்டு சேலைகள், ஏழை எளியோரும் விரும்பும் எல்லோருக்கும் பட்டுச்சேலைகள் மற்றும் பருத்தி சேலைகள், நவீன டிசைன்களில் படுக்கை விரிப்புகள், சுடிதார் இரகங்கள், ஆடவர் மனம் கவரும் ரெடிமேட் சட்டைகள், வேட்டிகள், கைலிகள் ஆகியவை மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, வாடிக்கையாளர்களின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் விதத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் சிறப்பிக்கவும், புத்தம் புதிய வடிவமைப்புகளை சந்தைப்படுத்தும் விதமாகவும், ரொக்க விற்பனையை அதிகரிக்கும் நோக்கிலும் 30 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

குறிப்பாக ஓணம் பண்டிகையை முன்னிட்டு பருத்தி பட்டு ரகங்களுக்கு 30 சதவீதம் தள்ளுபடியும், விசைத்தறி ரகங்களுக்கு 20 சதவீதம் தள்ளுபடியும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், ஓணம் பண்டிகையை முன்னிட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி, தக்கலை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய நான்கு கடைகளில் சேர்த்து, இவ்வருடம் (2016-17) கோ-ஆப்டெக்ஸ் மூலம் ரூ. 75 இலட்சம் மதிப்பில் பல்வேறு விதமான திருமண பட்டு சேலைகள், சுடிதார் இரகங்கள் விற்பனை செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் நாகர்கோவில் குமரி கோ-ஆப்டெக்ஸ்-க்கு ரூ.45 இலட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2015-16) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் விற்பனை குறியீடு நிர்யணயிக்கப்பட்டதில், ரூ. 54 இலட்சம் விற்பனை செய்து, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட செய்யப்பட்டது. அதேபோல் இவ்வருடம் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுக்கு அதிகமாக, விற்பனை செய்ய அசிசி வளாகம், சமுதாய நலகூடத்தில் (29.08.2016 முதல் 03.09.2016 வரை) நடைபெற்று கொண்டிருக்கும் கண்காட்சிச்கு பொதுமக்கள் அதிகளவில் வருகை தந்து, தங்களுக்கு தேவைப்படும் சேலை வகைகளை வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் திரு. ஜி. இசக்கிமுத்து, கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக குழு உறுப்பினர் திரு. மரியந்தோணி, நாகர்கோவில் விற்பனை நிலைய மேலாளர் திரு. ஜி. குமாரவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.